THIRU K. M. SUBRAMANIAM : Because the amenities and income within the city are so high, will this Government think of improving amenities in villages and also increase the per capita income in rural areas so that the inflow of population into the city from rural areas could be put an end to?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தலைவரவர்களே, சென்னை மாநகரத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் தனித்தனியாக எல்லா வசதிகளையும் நிறைவேற்றுவது என்பது இன்னும் 10 ஆண்டு காலத்திற்குள் இயலாது. ஆனால் சென்னை மாநகரைச் சுற்றி அமைக்கப்படுகின்ற புறநகர் பகுதிகளில் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி, சென்னை நகரை விரும்புவது போன்று அந்த பகுதிகளையும் மக்கள் விரும்பி, அங்கே குடியேறுகின்ற வகையில், தொழிற்சாலைகள், போக்குவரத்து வசதிகள், குடியிருப்பு வசதிகள், முதலான வசதிகளையும் செய்து கொடுப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்படும்போது சென்னைக்குள் வரக்கூடிய மக்கள் அங்கங்கே அமைகின்ற புறநகர்ப் பகுதிகளில் தங்கிவிடுவார்கள். அந்த அடிப்படையிலே உருவாக்கப்பட்ட ஒரு புது நகர் திட்டம் 'மறைமலை நகர்' புறநகர் திட்டமாகும்.*

Site for air-port at Salem

* 423 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the State Government have handed over the site at Kamalapuram on the Salem-Bangalore route to the Union Government for the construction of an air-port at Salem ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *(அ) & (இ) சேலத்தில் விமான நிலையம் ஒன்று அமைப்பதற்காக இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்துத் தங்களது முடிவை இந்திய அரசு தெரிவிக்கவில்லை. ஆனால், சேலத்தில் விமான நிலையப்[illegible]றைக் கட்டுவதைத் தற்போது எடுத்துக்கொள்ள இயலாது எ[illegible]வர்கள் தெரிவித்துள்ளனர்.*

[முற்பகல் 9-30 மணி

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : *தலைவர் அவர்களே, அங்கே முழுமையான விமான நிலையம் உடனடியாக அமைக்காவிட்டாலும், ஏர் ஸ்ட்ரிப் அமைக்கவாவது ஏற்பாடு செய்வார்களா?*

1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : செய்ய வேண்டியது மத்திய சர்க்கார். அவர்களுக்கு அப்படி ஒன்றும் யோசனை இருப்ப தாகத் தெரியவில்லை.

போந்தவாக்கம் கிராமத்தில் புதிய ஏரி அமைப்பு.

* 424 வின—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் கிராமத் தில் அமையும் ராள்ள கால்வாய் அணைத் திட்டமும், புது ஏரி அமைப்புத் திட்டமும் நிறைவேறுவதில் காலதாமதம் ஏன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பிராந்திய அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் அளிக்கப் பட்ட திட்டம் சில தொழில் நுட்பமாறுபாடுகளினல் திருத்தி அமைக்க வேண்டியதாயிற்று. எனவே, இத்திட்டத்தை மேற் கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ? இந்தத் திட்டம் எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 51,500. இது விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

காட்டுப்புத்தூர் வாய்க்கால் சீரமைப்பு.

* 425 வின—**திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அ[illegible] தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி [illegible]ம், தொட்டியம் தொகுதியில் உள்ள காட்டுப்புத்தூர் வாய[illegible]லைப் புதுப்பித்து சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?